இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 71 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 05 – புதன்கிழமை 22 அக்டோபர் 2025 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 71: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 05 - Wednesday 22 October 2025 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


### முன்னேற்பாடு நடவடிக்கைகளுக்கு அறிவுறுத்தல்!

# பருவமழை: பாதிப்புகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி மூலம் மேற்கொண்டார்!

சென்னை, அக்.22-

**வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று,மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து உயரதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக். 19 அன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 16.10.2025 - அன்று வடகிழக்கு பருவமழை தொடங்கியதன் காரணமாக அக்டோபர் 16, 17 மற்றும் 18 ஆகிய மூன்று நாட்களுக்கு தமிழ்நாட்டில் பரவலான மழை பெய்தது. குறிப்பாக, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் சராசரியாக 12 மி.மீ. மழை பெறப்பட்டது.

திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொண்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து ஆய்வு மேற்கொண்டு, ஆயத்த நிலை மற்றும் மீட்பு பணிகளை துரிதப்படுத்தவும், கரையோரங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்ல மாவட்ட நிருவாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக். 19 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும், மழையினால் பாதிக்கப்பட்டுள்ள திருவாரூர் மாவட்டத்தில் விவசாயப்பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில், கொள்முதல் பணிகளை தொய்வின்றி நடத்திடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெறப்பட்டுள்ள நெல் மூட்டைகள் விரைவாக கிடங்குகளுக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கைகளை துரிதப்படுத்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, வடகிழக்குப் பருவமழையையொட்டி சென்னையில் மேற்கொண்டுவரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்தும், மழைநீர் தேங்கும் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அப்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் சேத விவரங்கள் குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த ஆய்வின்போது வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### விழிப்புணர்வோடு ஒருங்கிணைந்து செயல்படுவோம்!

## பருவமழைக் காலத்தைப் பாதிப்புகளின்றி கடப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.22–

வடகிழக்குப் பருவமழை தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், “விழிப்புணர்வோடு ஒருங்கிணைந்து செயல்படுவோம்; பாதிப்புகளின்றி காப்போம்;” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

வடகிழக்குப் பருவமழை தொடங்கி, தமிழ்நாடெங்கும் பரவலாக மழை பெய்து வருவதால், மாநில அவசரகாலச் செயல்பாட்டு மையத்தில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக முன்னேற்பாடு நடவடிக்கைகளை ஆய்வு செய்தேன். பாதுகாப்பாகத் தங்குவதற்கு முகாம்கள், குடிநீர், உணவு, மருந்து ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பதோடு, திருவாரூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவும் அறிவுறுத்தியுள்ளேன். விழிப்புணர்வோடு ஒருங்கிணைந்து செயல்படுவோம்! பருவமழைக் காலத்தைப் பாதிப்புகளின்றிக் கடப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### கோவை ஜி.டி.நாயுடு

## மேம்பாலத்தில் நவீன கேமராக்கள்!

*கோவை, அக். 22 -*

*கோவை - அவிநாசி சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை 10.10 கிலோ மீட்டர் தூரத்துக்கு கட்டப்பட்ட மேம்பாலம், கடந்த 9ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கப் பட்டது.*

*கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் கூறும்போது, “அவிநாசி சாலை ஜி.டி.நாயுடு மேம்பாலத்தில் இறங்குதளங்களில் ரப்பர் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, உப்பிலிபாளையம் ரவுண்டானா அருகே சிக்னல்கள் அமைக்கப் பட்டுள்ளன. மேம்பாலத்தின் மீது பல்வேறு இடங்களில் ‘ஏஐ’ தொழில்நுட்ப வசதியுடன் கூடிய சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன.*

*இதன் மூலம் அதிவேக வாகன ஓட்டிகள், விதிமீறல் வாகன ஓட்டிகள் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேம்பாலத்தில் வாகனங்கள் இறங்கும், ஏறும் இடங்களில் அறிவிப்புப் பலகைகளை, குறிப்பிட்ட தூரத்துக்கு முன்னரே பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்றார்.*

---

### முன்னாள் துணைவேந்தரின் இடைநீக்கத்தை ரத்துச் செய்த

## ஆளுநர் ரவியின் உத்தரவு செல்லாது!

### அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்மானம்!

சென்னை, அக். 22 -

அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் வேல்ராஜின் இடைநீக்கத்தை ரத்து செய்த ஆளுநரின் உத்தரவு செல்லாது என அப்பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 2021 ஆம் ஆண்டு வேல்ராஜ் நியமிக்கப்பட்டார்.

வேல்ராஜ் துணைவேந்தராக பதவி வகித்த காலத்தில், அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படுகிற தனியார் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்கியதில் முறைகேடு செய்ததாக அவர் மீது புகார் எழுந்தது.

இதுதொடர்பாக வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், ஜூலை 31 அன்று பணி ஓய்வு பெறவிருந்த நாளில் அவர் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து வேல்ராஜ் பணியிடை நீக்கத்தை ரத்து செய்ய ஆளுநர் உத்தரவிட்டார். இது குறித்து தமிழ்நாடு அரசுக்கு ஆளுநர் கடிதம் அனுப்பினார்.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழக சிண்டிகேட் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், முன்னாள் துணை வேந்தர் வேல்ராஜின் இடைநீக்கத்தை ரத்து செய்த ஆளுநரின் உத்தரவு செல்லாது என அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தனியார் கல்லூரிகளில் போலி ஆசிரியர் சேர்க்கை குறித்து ஊழல் தடுப்பு போலீசார் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், பதிவாளர் உட்பட பல்கலைக்கழகத்தின் 11 அதிகாரிகளை அவர்களின் பதவிகளில் இருந்து விடுவிக்கவும் சிண்டிகேட் பரிந்துரை செய்துள்ளது.

---

### தெற்கு ரயில்வேயில்

## 147 சிறப்பு ரயில்கள் இயக்கம்!

*சென்னை, அக். 22 -*

*தெற்கு ரயில்வேயில் அக்.22ம் தேதி வரை 147 சிறப்பு ரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 25 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன.*

*பண்டிகை தினத்தை முன்னிட்டு, தெற்கு ரயில்வே சார்பில், அக்.16ம் தேதி முதல் 22ம் தேதி வரை 147 சிறப்பு ரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, கடந்த 16, 17 ஆகிய தேதிகளில் சென்னை, கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து மொத்தம் 37 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன.*

*18ம் தேதி சென்னை, போத்தனூர், திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களில் இருந்து மொத்தம் 24 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. 19ம் தேதி 19 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டது.*

*20ம் தேதி அன்று மதுரை, தூத்துக்குடி, தாம்பரம், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட ஊர்களில் இருந்து 23 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன, இதுபோல, நேற்று (21ம் தேதி) 25 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. இன்று (22ம் தேதி) 19 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.*

*இத்தகவலை தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.*